## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.472/2010
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 18 |
| Name | : Ranganadhan |
| Father's Name | : Thiyagarajan |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2021.

**முதல் விசாரணை.**

நான் ஒகையூரில் வசித்து வருகிறேன். நான் கார்பண்டராக இருந்து வருகிறேன். வேலுமணி என்பவர் என்னுடைய நண்பர் ஆவார். அவர் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக நான் கேள்விப்பட்டேன். அவர் என்னிடம் ரூ.10,000/= வாங்கிக்கொண்டு என்னுடைய பாஸ்போர்டையும் 2009ல் வாங்கி சென்றார். அதே மாதம் மூன்று மாதம் கழித்து விசா பேப்பர் ஒன்றை கொடுத்தார். அதன் பின்னர் கோயம்பேடு பேருந்து நிறுத்ததில் ரூ.88 ஆயிரத்தை அவரிடம் சார்ஜா செல்வதற்காக இந்த பணத்தை கொடுத்தேன். என்னை மீனம்பாக்கம் ஏர்போர்டுக்கு வந்து என்னை சார்ஜாவுக்கு அனுப்பி வைத்தார். நான் சார்ஜா சென்றவுடன் சார்ஜா ஏர்போர்ட்டில் என்னுடைய விசா போலி விசா என்று தெரிவித்து என்னை அங்கிருந்த ஓய்வு அறையில் 14 நாட்கள் அங்கேயே என்னை வைத்து விட்டனர். நான் எனது வீட்டுக்கு இந்த தகவலை சொல்லி அவர்கள் திருச்சி அக்பர் டிராவல்ஸில் டிக்கெட் எடுத்து எனக்கு பேக்ஸ் மூலம் அனுப்பியதில் நான் சார்ஜாவிலிருந்து என்னுடைய சொந்த ஊரான ஒகையூருக்கு வந்து விட்டேன். நான் ஒரு வருட காலமாக வேல்மணி என்பவர் எனக்கு பணம் தர வேண்டி இருந்த போது வேல்மணி என்பவர் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் கனடா அனுப்புவதற்காக சிலருக்கு ஏற்பாடு செய்து அதில் ஏமாற்றியது குறித்தும் எனக்கு தெரிய வந்தது. நான் முதலில் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் வேல்மணி மீது புகார் கொடுத்து விட்டு அதன் பிறகு கிண்டியிலுள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். நான் போட்ட புகார் குறித்து

சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் தீர்ப்பானது குறித்து வேல்மணி எனக்கு ரூ. 98,000/= திருப்பி கொடுத்து விட்டார். என்னை போலிஸ்சார் வேறு ஒரு நபர் வேல்மணி மீது கனடா செல்வது சம்பந்தமாக முறைகேட்டில் கொடுத்த புகாரின் பேரில் என்னை சாட்சியாக விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கில் 1ம் எதிரி அம்ஜத் என்பவரை தெரியாது. அவரை நான் பார்த்தது இல்லை.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரி வேல்மணியை சிறு வயது முதலே தெரியும். அவராகவே வந்து என்னை வெளி நாடு அனுப்புவதாக கேட்டார். அவர் என்னிடம் அவ்வாறு சொன்ன தேதி, மாதம் தெரியாது. நான் போலிஸ்சார் விசாரணையில் முதல் தவணையாக ரூ.98 ஆயிரம் கொடுத்ததாகவும், நீதிமன்ற முதல் விசாரணையில் முதல் தவணை ரூ.10,000/= அதன் பின்பு ரூ.88,000/= ஆயிரம் கொடுத்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது போலீஸ்சார் விசாரணையில் வெளிநாடு செல்வதற்காக ஒரு லாட்ஜுல் தங்க வைத்து மறுநாள் என்னை வழி அனுப்பியதாக எனது விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் என்னை அனுமதிக்காததால் என்னை தங்க வைத்த அறையிலிருந்து நானே போன் மூலம் எனது வீட்டிற்கு தகவல் அளித்தேன். நான் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து ஒரு வருடம் கழித்து கள்ளகுறிச்சி காவல் நிலையத்தில் வேல்மணி மீது புகார் அளித்தேன். நான் கொடுத்த புகாரின் பேரில் விசாரணை செய்தனர். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. வேல்மணி கைது ஆன பிறகு போலீஸ்சார் தகவல் சொன்ன பிறகு சிபிசிஐடி அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு என்னுடைய ஆவணங்கள் அனைத்தையும் கொடுத்தேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், எதிரியிடம் நான் எந்த தொகையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. போலிஸசார் கேட்டுக்கொண்டதின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.